முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1101

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.10.2022, செவ்வாய்கிழமை

1. அறமெனும் வேலிகொண்ட அரங்கனே
அன்னதான சேவையாற்றும் தேசிகனே
வரம்தந்து உலகமக்களை காக்கவே
வள்ளலாக வாழுகின்ற ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 17 ம் நாள் 04.10.2022 செவ்வாய்கிழமை)
ஆசிதந்து உன் சக்திக்குள் யான்
ஆற்றலாக முழுமைபட கலந்துள்ளேன்
3. உள்ளபடி அரங்கன் உன்னை நம்பி
உலகத்தில் வரும் மக்களுக்கெல்லாம்
வல்லமைபட என்னாசி உறுதியாகும்
வரம்தந்து அவர்களுக்குள் யானிருந்து
4. இருந்துமே உலகமாற்றம் தன்னை
இனிதே அரங்கன் உன் சக்தியாக நடத்தி அருள்வேன்
அருளவே அரங்கனின் தர்மத்தை அளவில்லா காக்கும் அன்பர்கட்கு
வரமாக ஆறுமுகன் யான் இறங்கி வழிகாட்டி பெருந்துணைபுரிவேன்
5. துணையாக அரங்கன் சக்திக்குள்
தொடர்ந்து யான் இருந்து வர
இணையில்லா அரங்கன் திருவடி பற்றி
இந்த உலகில் தொடர்ந்து வரும் அன்பர்கட்கு
6. துணையாக ஆறுமுகன் யான் வருவதோடு
தேற்றம் தந்து இனி பிறவா பேற்றையும்
இனிதே ஆறுமுகன் யான்
அவர்கட்கு தந்து அருள்வேன்
7. அருளவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
அவதாரம் புரிந்து வந்து இணைந்தால் கலியுகத்தில்
அவர்களெல்லாம் அரங்கன் தொடர்பில் உள்ளவர்களெல்லாம்
ஞானிகளாகி ஞான ஆட்சி இந்த உலகம் கண்டு தேறநேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–